தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 12 டிசம்பர் 2011 கனி 1

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted at Batlagundu Post office on 10 thDec 2011

To



THE 2nd WORLD EVANGELISM RETREAT

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristsouthindia.com


*Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

# ஸ்தேவான் - STEPHEN



- முதல் நூற்றாண்டு சபையில் நற்சாட்சி பெற்ற ஏழுபேரில் ஒருவன் ஸ்தேவான் - அப்.6:3-5
- ஸ்தேவான் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் ஜனங்களுக்குள்ளே செய்தான் - அப்.6:8
- முதல் நூற்றாண்டு காலத்தில் முதன் முதலில் கொலை செய்யப்பட்டவர்களில் ஒருவன் - அப்.7:60
- ஸ்தேவான் நகரத்துக்குப் புறம்பே கொல்லப்படுகையில் பவுல் அவன் வஸ்திரங்களைக் காவல் காத்துக்கொண்டிருந்தான் - அப்.7:58
- ஸ்தேவான் நிமித்தமாக எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கு மட்டுமே சொன்னார்கள் - அப்.11:19
- ஸ்தேவான் மரணதருவாயில் தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரியசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டான் - அப்.7:55
- ஸ்தேவான் வீட்டார் அகாயாநாட்டிலே முதற்பலனானவர்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ய தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் - 1கொரி.16:15

## மூப்பனே உனக்கு...



1. உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் - அப்.20:28
2. ...அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டும்1தீமோ.3:2
3. இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருக்க வேண்டும் 1தீமோ.3:3
4. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனாய் இருக்கவேண்டும் - 1தீமோ.3:4
5. தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? - 1தீமோ.3:5
6. அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு நூதன சீஷனாயிருக்கக்கூடாது - 1தீமோ.3:6
7. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும் - 1தீமோ.3:7
8. கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய் இருக்கவேண்டும் - தீத்து1:7
9. தன் இஷ்டத்தின்படி செய்யாதவனாயிருக்க வேண்டும் - தீத்து 1:7
10. நன்றாய் விசாரணை செய்கிற மூப்பனாயிரு - 1தீமோ.5:17
11. குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்கு படுத்தும்படி ஏற்படுத்தப்பட்டவர்கள் - தீத்து1:5
12. தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும் - தீத்து1:9

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 136

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மை பாராட்டல் யாவும் என்னவாயிருக்கிறது?
2. கடற்பாசி என் தலையைச் சுற்றிக்கொண்டது என்ற தீர்க்கன் யார்?
3. ஒருவன் அநியாயமாய் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே எப்படியிருக்கும்?
4. அதிபதி கொடு என்கிறான்; நியாயாதிபதி எதைக் கேட்கிறான்?
5. அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் எவைகளும், எவையும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்?
6. ஆறுகளின் மதகுகள் திறக்கப்படும், எவை கரைந்துபோம்?
7. நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் எப்படிப்பட்டவனாயிருக்கிறான்?
8. கல்லு சுவரிலிருந்து கூப்பிடும், உத்திரம் மச்சிலிருந்து என்ன இடும்?
9. நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
10. இடுக்கண் செய்து, ஊத்தையும் அழுக்குமாயிருக்கிற நகரத்துக்கு என்ன?

## கர்த்தரைப் பின்பற்றும்போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள்...



1. பாவத்திலிருந்து விடுதலை
2. பரலோக பாக்கியம்
3. தேவனுடைய பிள்ளையாகும் ஆசீர்வாதம்
4. உலகத்திலே சமாதானம்
5. அற்புத கர்த்தர் நம்முடைய வாழ்நாள்ளெல்லாம் நம்மோடு இருக்கிறார்
6. ஜீவனுள்ள மார்க்கத்தில் இருக்கிறோம் என்ற அசையாத நம்பிக்கை
7. பரிசுத்தவான்களோடு உள்ள ஐக்கியம்
8. நாம் வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாக கர்த்தர் செய்யும் அதிசயம்
9. பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்
10. நித்தியமான வாசஸ்தலம் உண்டு
11. உன்னத தலைவர்
12. மகிழ்ச்சியான குடும்பம்

சிறுவர் பகுதி

## உன் தாய் தகப்பனுடைய போதகம்



"என் மகனே, உன் தகப்பன் புத்தியைக்கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே" (நீதிமொழிகள் 1:8). அப்பாவுக்கு ஒன்னுந்தெரியாது, அம்மா சுத்தம் என்று சொல்லி அநேக பிள்ளைகள் தங்களுடைய தகப்பனுடைய புத்தி மதிகளையும் தாயினுடைய போதகத்தையும் அசட்டை செய்துவிட்டு பின்நாட்களில் படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?

உங்களை பெற்றெடுத்த பெற்றோர் உங்களை பெற்றவர்கள் என்பதை மறந்து விட்டு அவர்களுக்கு ஒன்னுந்தெரியாது என்று சொல்லாதிருங்கள். வேதம் உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தை தள்ளாதே என்று சொல்லுகிறது. உங்களுக்கு முதல் போதகர் அல்லது ஆசான் பெற்றோர்களாக இருக்கிறார்கள். உங்களைப் பெற்றவர்களுக்குத் தெரியும் உங்களை எப்படி வழிநடத்தவேண்டுமென்று, உலகத்தைப் பார்த்தும் உங்களுடைய நண்பர்களைப் பார்த்தும், உறவினர்களைப் பார்த்தும் ஏமாந்துபோகாதிருங்கள். "பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேட்டு, புத்தியை அடையும்படி கவனியுங்கள்" (நீதிமொழிகள் 4:1). தேவன் அவர்களைக் கொண்டு பேசுவார். உங்களுக்கு பாதுகாவலராக அவர்களையே பூமியில் வைத்துள்ளார். மற்றவர்களை நம்பிமோசம்போகாதிருங்கள்.

உங்களுடைய பெற்றோர்களுக்கு செவி கொடுத்து. அவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள். அது கர்த்தருக்குப்பிரியமானது. அவர்களிடம் பொய் சொல்லாதிருங்கள். அவர்களை ஏமாற்றி பணம் பெற்றுக்கொள்ளாதிருங்கள். உங்களுக்கு செல்போன் தேவையில்லை. உங்களுக்கு வயதுவரும்போது, அல்லது நீங்கள் ஒரு வேலைக்கு வரும்போது உங்களுக்கு செல்போன் தேவை அப்பொழுது வாங்கினால் போதும். சிம்கார்டில் ஆபாச படங்களை டவுன்லோடு செய்துகொண்டும், கம்யூட்டர் சென்டர்களுக்கு சென்று ஆபாச படங்களை பார்ப்பதும் உங்களுடைய வாழ்க்கையை பாதிக்கும். உங்களுடைய வயதுள்ளவர்களுடன் பழகுங்கள். தேவையற்ற காரியத்தை பேசாமல், பாடசம்பந்தமாக பேசுங்கள். கிடைக்கும் நேரத்தில் அதிகமான வார்த்தைகளை மனப்பாடம் செய்யுங்கள். உங்கள் வாழ்நாளெல்லாம் அது உதவியாயிருக்கும். உலகநாடுகளைப் பற்றித் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள். நேரத்திற்கு படியுங்கள், விளையாடுங்கள், நித்திரைக்கு செல்லுங்கள். காலையில் உங்களுடைய பெற்றோருக்கு ஸ்தோத்திரம் சொல்லுங்கள். தேவனை நோக்கி ஜெபிக்க மறவாதிருங்கள். கூடுமானால் ஒரு வாரத்திற்கு அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு வசனத்தையாவது மனப்பாடம் செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம்.


"பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது" கொலோசெயர் 3:20



திவேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 12 டிசம்பர் - 2011 கனி - 1

ஆசிரியவுரை

# சிலுவையைப் பற்றிய உபதேசம்
# *The Message of The Cross*



பலர் பலவிதமான உபதேசங்களையும், கோட்பாடுகளையும் உடையவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் உங்களுக்கு அறிவிக்கிறோம். இந்த உபதேசத்தைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**முதலாவது, சிலுவையைப் பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு அது தேவபெலனாயிருக்கிறது.** இதைக்குறித்து பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதினநிருபத்தில் நாம் காணலாம்; "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1கொ.1:18). சிலுவையைப்பற்றிய உபதேசத்தைக் குறித்துச் சொல்லும்போது எல்லோரும் அதை ஏற்றுக்கொள்ளுகிறார்களா? இல்லை. ஏனெனில் சிலருக்கு அது பைத்தியமாயிருக்கிறது. ஆண்டவர் வந்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கவேண்டுமா? வேறுவகையில் அவர் நம்முடைய பாவங்களை போக்கமுடியாதா? அல்லது நாமே நம்முடைய பாவங்களை போக்கவழியில்லையா? என்றெல்லாம் பல கேள்விகளை கேட்டு குழப்பமடைகின்றனர். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு என்பது இல்லை என்பது உண்மை. மனிதனுக்காக பாவமில்லாத ஒருவர் இரத்தத்தை சிந்தவேண்டும். அப்படிப்பட்ட நபர் பூமியில் இல்லை. ஆகையால் தேவன் தம்முடைய குமாரனையே ஒப்புக்கொடுத்தார். அப்பொழுது இருந்த ரோம அதிகாரம் அவரை சிலுவையில் அறைந்து கொன்றது. அவரை பிதாவாகிய தேவன் மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பினார். இது உலகமறிந்த உண்மை. அழியாத வரலாற்று

சுவட்டில் பதியபட்டுள்ளது. மேலும், வானமும் பூமியும் அதிலுள்ள அனைத்தும் குறிப்பாக ஆண்டவர் ஏற்படுத்தின அப்போஸ்தலர்களும், அவர்களைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் எழுதின வேதமும் அதற்கு சாட்சியாயிருக்கிறது. எனவே சிலுவையைப் பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு அது தேவனுடைய பெலனாயிருக்கிறது என காண்கிறோம். இந்த உபதேசத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, அது தேவ பெலனுள்ளதாயிருக்கும்.

**இரண்டாவது, சிலுவையைப் பற்றிய உபதேசம் தேவனுடைய அன்பைப் போதிக்கிறது.** அன்பைப் பற்றி போதிக்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஆத்துமாவிற்கு செய்த காரியங்கள் என்ன என்று பார்ப்போமானால் ஒன்றுமிராது. ஆத்துமாக்களை நேசிக்கிறோம் என்று அநேக ஆசிரமங்களை நிறுவுகிறார்கள். நாளடைவில் ஆசிரமங்கள் அசிங்கங்களாக மாறுகிறது. தேவனுடைய திட்டத்தைப்பாருங்கள்; "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என வேதம் நமக்கு தெளிவாகபோதிக்கிறது (யோவா.3:16). பிதாவாகிய தேவன் தாம் உண்டாக்கின மனிதன் கெட்டுப்போகக்கூடாது என்பதற்காக, அவனை இரட்சிக்கும்படியாக தம்முடைய குமாரனையே பலியாக ஒப்புக்கொடுத்து அவரைக்கொண்டு இரட்சித்தார். இந்த அன்பு எப்பேர்பட்ட அன்பு! இது ஆகாப்பே அன்பல்லவா, எவன் தன்ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுக்க துணிவான். சமீபத்தில் மூன்று வனக்காவலர்கள் வனத்தை சுற்றிப்பார்க்கும்படியாக சென்று இருந்தபோது, ஒரு வனக்காவலர் ஒரு குகையின் மேல் கல்லில் ஏறி பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்த குகையில் தன்குட்டிகளுடன் படுத்திருந்த ஒரு புலி அவர்மீது பாய்ந்து அவரை கடித்து குதறிப்போட்டது. இதை அருகாமையில் நின்றுகொண்டிருந்த இரண்டு வனக்காவலர்களும் பார்த்து ஓட்டம்பிடித்துவிட்டனர். ஊருக்குள் வந்து சொல்லி மக்களை திரட்டி சென்று பார்ப்பதற்குள் அவருடைய பாதி சரீரத்தை தின்றுபோட்டு போய்விட்டன. இந்த வனக்காவலாலரை உடன் நின்று கொண்டிருந்த இரண்டு காவலாலரால் காப்பாற்ற முடிந்ததா? முடியவில்லையே. அவரவர் தன் தன் ஜீவன் தப்ப ஓடிப்போனார்கள் என்று காண்கிறோம். ஆம், அது தான் உலகம். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் அப்படிப்பட்டவரல்ல, நம்மை இரட்சிக்கும்படியாக அதாவது பாவத்திலிருந்து மீட்கும்படியாக பாவபிசாசை ஒழிக்கும்படியாக தம்முடைய ஒரே பேறான குமாரனை ஒப்புக்கொடுத்தார்.

**மூன்றாவதாக, சிலுவையைப் பற்றிய உபதேசம் ஜீவாதிபதியை அடையாளம் காட்டுகிறது.** ஜீவன்களுக்கெல்லாம் அதிபதியாக இயேசு இருக்கிறார். அவரை இந்த உலகம் அறியாதிருந்தது. அவரோ உலகத்தில் இருந்தார். நம்மைப்போல மாம்சத்தில் வந்தபடியினாலே அவரை தச்சனுடைய குமாரன்



## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



வழங்கும்

ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்



### உங்கள் வானொலியில்

**இலங்கை ஆசிய சேவை SW 25 *மற்றும்* 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5.30 *முதல்* 5.45 மணி வரை கேட்டு பயன் பெறுங்கள்**



### உங்கள் தொலைக்காட்சியில்

**TAMILAN TV**

**EVERY Monday 6.00 - 6.15 a.m**

**EVERY Saturday 6.15 - 6.30 p.m**

## பொது அறிவு சோதனை

1. பொதுவாக ராட்சத பலூன்களில் நிரப்பப்படும் வாயு எது?

அ) ஹைட்ரஜன் ஆ)ஹீலியம் இ) ஹைட்ரஜன் சல்பைடு

2. காலிபிளவரில் நாம் உண்ணக்கூடிய பகுதி எது?

அ) மஞ்சரி ஆ)பூ இ) பூமொட்டு

3. திடீர் மாற்றக்கோட்பாட்டை விளக்கியவர் யார்?

அ) டார்வின் ஆ) மோர்கன் இ) லாமார்க்

4. பறவைகள் மூலமாக மகரந்த சேர்க்கை நடைபெறதலுக்கு என்ன பெயர்?

அ) ஆர்னித்தோபிலி ஆ) அனிமோபிலி இ) ஹைட்ரோபிலி

5. விளையாட்டு வீரர்களுக்கு உடனடியாக சக்தி தரும் பொருள் எது?

அ) குளுக்கோஸ் ஆ) வெண்ணெய் இ) புரதம்

விடைகள்: 1. ஆ 2. அ 3. ஆ 4. அ 5. அ

# உண்மையான சபை தோன்றிய வரலாறும்
## பிரிவினை சபைகள் தோன்றிய வரலாறும்

**<u>உண்மையான திருச்சபை</u>**

**“இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” மத்தேயு 16:18**

| சபை | வருடம் | தோற்றுவித்தவர் | இடம் |
|---|---|---|---|
| **கிறிஸ்துவின் சபை** | கி.பி.33 | கிறிஸ்து | எருசலேம் |
| ரோமர்16:16 | | மத்தேயு16:18 | அப்.2:14 |
| எபேசியர்5:32 | | அப்.20:28 | ஏசாயா2:2-4 |
| கொலோ1:18 | | எபேசியர்1:22 | லூக்கா24:47-49 |

**<u>பிரிவினைக்கூட்டம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தோலிக்க சபை | கி.பி.607 | மூன்றாம் போனிபஸ் | ரோம் |
| 2. லூத்தரன் சபை | கி.பி.1517 | மார்டின் லூத்தர் | ஜெர்மனி |
| 3. இங்கிலாந்து சபை | கி.பி.1534 | எட்டான் ஹென்றி | இங்கிலாந்து |
| 4. கால்வினிஸ்ட் சபை | கி.பி.1555 | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து |
| 5. பிரிஸ்பிட்டேரியன் சபை | கி.பி.1560 | ஜான் நாக்ஸ் | ஸ்காட்லந்து |
| 6. காங்கிரிகேஷனலிஸ்ட் சபை | கி.பி.1592 | இராபர்ட் பிரவுன் | ஹாலந்து |
| 7. பாப்டிஸ்ட் சபை | கி.பி.1607 | ஜான் ஸ்மித் | ஆம்ஸ்டர்டாம் |
| 8. அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை | கி.பி.1629 | ரோஜர் வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 9. நண்பர்கள் ஐக்கிய சபை | கி.பி.1665 | டெர்பி ஜார்ஜ்பாக்ஸ் | இங்கிலாந்து |
| 10. மெத்தடிஸ்ட் சபை | கி.பி.1739 | ஜான் வெஸ்லி பால் | இங்கிலாந்து |
| 11. கடைசிகால புனிதர்கள் சபை | கி.பி.1830 | ஜோசப் ஜான் ஸ்மித் | நியூயார்க் |
| 12. ஏழாம் நாள் சபை | கி.பி.1843 | வில்லியம் மில்லர் | நியூயார்க் |
| 13. கிறிஸ்தவ விஞ்ஞான சபை | கி.பி.1881 | மேரி பெக்கர் எட்டி | போஸ்டன் |
| 14. யேகோவா சாட்சிகள் | கி.பி.1884 | சார்லஸ் டி.ரஸல் | பென்சில்வானியா |
| 15. தேவனுடைய சபை | கி.பி.1886 | ரிச்சர்ட் ஸ்பர்லிங் | டென்னிஸி |
| 16. நசரேயர் சபை | கி.பி.1895 | பி. எப். பிரீஸ் | கலிபோர்னியா |
| 17. பெந்தெகொஸ்தே சபை | கி.பி.1901 | சில குழுவினர் | இலங்கை |
| 18. அசெம்பிளி ஆப் காட் சபை | கி.பி.1914 | சில குழுவினர் | ஹாட்ஸ் பிரிஸ் |
| 19. இன்னும் அநேகம்............................... | | | |

**“மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்” என்றார் இயேசு (மத்தேயு 15:9)**



என்றும், யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்களுக்குச் சகோதரன் என்றும் சொன்னார்கள். இன்றைக்கும் அநேகர் அவர் வெளிநாட்டு கடவுள் என்றும் ஒரு மதபோதகர் என்றும் சொல்லுகிறார்கள். பேதுரு தம்முடைய பிரசங்கத்தில் “ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்” என்றார்கள் (அப்.3:15). இந்த இயேசு ஜீவன்களுக்கெல்லாம் அதிபதி என்பதை தெரிந்துகொள்ளுங்கள். மரித்து நான்கு நாட்கள் ஆன லாசரு அவருடைய சத்தம்கேட்டு உயிர்த்தெழுந்தான். கர்த்தர் மீனுக்கு கட்டளையிட யோனாவை மீன் கரையிலே கக்கினது. பிலேயாமுடன் கழுதை பேசி அவனுடைய மதிகேட்டைத் தடுத்தது. ஏன் இவர்கள் பேசாதிருந்தால் இந்தக் கல்லுகளே பேசும் என்று பரிசேயர்களைப் பார்த்து கர்த்தர் சொன்னார். ஆக, அவரை சகல ஜீவன்களும் வானமும் பூமியும் துதிக்கிறது, அவருக்குக் கீழ்ப்படிகிறது.

**நான்காவதாக, சிலுவையைப் பற்றிய உபதேசம் நம்முடைய பாவங்களை போக்கும்படி சிலுவையில் பாடுபட்டார் என்பதை எடுத்துரைக்கிறது**. இயேசுவானவர் சிலுவையில் மரிக்கவில்லை என்றால் நமக்கு பாவமன்னிப்பில்லை. பேதுரு சொல்கிறார்; “நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்” என்கிறார் (1பேது.2:24). நாம் நீதிக்குப் பிழைக்கும்படியாக இயேசு நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்து தீர்த்தார். நியாயப்பிரமாணத்தின் காலத்தில் மனிதனுடைய பாவங்களுக்காகவும், அக்கிரமங்களுக்காகவும் ஆடு பலியிடப்பட்டது, இப்பொழுது ஒரே பலியாக சிலுவையில் தம்முடைய குமாரனை ஒப்புக்கொடுத்து, நம்மை மீட்டுக்கொண்டார். நியாயப்பிரமாணத்தின் காலத்தில் வெண்கல சர்ப்பத்தை மோசே வனாந்தரத்திலே உயர்த்திவைத்தார் எதற்கென்றால் பாம்பு கடிபட்டவன் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப்பார்த்து பிழைப்பதற்காக. அதைப்போல சிலுவையில் நம்முடைய பாவங்களை போக்கியவரை நோக்கிப்பார்ப்பவன் பிழைப்பான். ஆகையால் அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். இந்த உபதேசத்தை சிலுவை போதித்துக்கொண்டிருக்கிறது.

**ஐந்தாவதாக, சிலுவையைப் பற்றிய உபதேசம் பாவத்தை ஜெயித்தது.** பாவத்தை ஜெயிக்க பல வழிகள் இருப்பதாக சொல்கிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து பாவத்தின் அதிபதியாகிய பிசாசை தம்முடைய மரணத்தினாலே ஜெயித்தார் என காண்கிறோம். “துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றிசிறந்தார்” (கொலோ.2:15). முள்ளை முள்ளாலே எடுக்கவேண்டும் என்பார்கள். அதைப்போல மரணத்திற்கு அதிகாரியான பிசாசை தம்முடைய

குமாரனுடைய மரணத்தினாலே ஜெயித்தார். அநேகர் பாவத்திற்கு விரோதமாக போராடுகிறார்கள். முடிவிலே பாவம் அவர்களை ஜெயித்துவிடுகிறது. எத்தனையோ துறவிகளைப் பார்க்கிறோம். கடும் தவமிருந்து யார் கண்களினாலும் படாமல் இமயமலைகளுக்கும், கண்காணா இடங்களுக்கும் சென்று தவமிருந்து கடைசியில் மாம்ச இச்சைகளுக்கு இடம்கொடுத்து பாவத்திற்கு அடிமையாகிவிடுகின்றனர். நம் ஆண்டவர் பாவத்திற்கு எதிர்த்து நின்று அவனை ஜெயித்தார். 40 நாட்கள் அவர் உபவாசம் இருந்தபின்பு சோதனைக்காரன் அவரை சோதித்தான். அவனுடைய சோதனையில் அவர் விழுந்துபோகவில்லை அப்பாலே போ சாத்தானே என்றார். அநேக தீர்க்கதரிசிகள் செய்யமுடியாத காரியத்தை, தேவனுடைய ஒரேபேறான குமாரன் இயேசு சிலுவையில் பிதாவின் சித்தம் நிறைவேற்றுகிறவராக செய்து முடித்து. பிதாவே என் ஆவியை உம்முடைய கைகளில் ஒப்புவிக்கிறேன் என்றார். இந்த சிலுவையின் உபதேசம் பாவத்தை சிலுவையில் ஜெயித்தது.

**ஆறாவதாக, சிலுவையைப் பற்றிய உபதேசம் நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை மீட்டது.** ஏனெனில் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறது. ஆகையால் நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது; ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். பின்வாங்கிப்போவானேயானால் அவன் மீது என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா.3:13). நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. ஆனால் சிலுவை நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு மீட்டது.

**ஏழாவதாக, சிலுவையைப்பற்றிய உபதேசம் மன்னிப்பை எடுத்துரைக்கிறது. மன்னிப்பு என்பது மகத்தான செய்தியாக இருக்கிறது.** சிறையில் அடைக்கப்பட்ட ஆயுள் கைதிக்கு விடுதலை என்றால் அவனுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகும். அதைப்போல பாவத்தில் அடைபட்டு, நியாயப்பிரமாணத்தின் சாபத்தின்கீழ் இருக்கிற ஒரு மனிதனுக்கு மீட்பு என்று சொல்லும் செய்தி சிலுவையைப் பற்றிய உபதேசம் மட்டுமே. இதுவே அவனுக்கு சந்தோஷ செய்தி! இதை ஆண்டவர் இயேசு ஒருவரே கொடுக்க வல்லவராயிருக்கிறார். ஏனெனில் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார். ஆகையினாலே; அவர் சிலுவையில் தொங்கும்போது; "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (லூக்.23:34). சிலுவை



பேசுவதும் போடா, வாடா என்று பேசுவதும் உங்கள் புருஷனுக்கு புகழையும், கிரீடத்தையும் கொண்டுவராது. புறஜாதி ஸ்திரீகள் எப்படி எப்படியோ பேசுவார்கள் அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை. அவர்களைப் பின்பற்றவும் கூடாது என வேதம் கூறுகிறது. "புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளாதிருங்கள்" (எரே.10:2). பெண்ணாய் பிறந்தவளே, குணசாலியான ஸ்திரீயாகயிருந்து உன்னுடைய புருஷருக்கு கிரீடமாகவும், புகழ்ச்சியாகவும் காணப்பட தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக ஆமென்.

## நடப்புச் செய்திகள்

♑ *பள்ளிமாணவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர்களைக் கொண்ட, 'சிறப்பு பாது காப்புபடை' ஏற்படுத்த பள்ளிக் கல்வி இயக்குனர் மணி உத்தவிட்டுள்ளார்.*

♑ *2020-ல் இந்திய துறைமுகங்கள் 2,495 மில்லியன் டன்சரக்கு கையாள்வதற்காக 2,87,000 கோடி ரூபாயில் வளர்ச்சித்திட்டப்பணிகள் நடந்துவருதாக மத்திய கப்பல்துறை அமைச்சர் வாசன் தெரிவித்துள்ளார்.*

♑ *உலக வல்லரசு நிலையை விட்டுக் கொடுக்காது அமெரிக்கா.*

♑ *ஆண்டுதோறும் மின் கட்டணங்களை உயர்த்த மத்திய மின்சார தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்துள்ளது.*

♑ *மூன்று புதிய நீர்த்தேக்கங்களை ஏற்படுத்த ஆய்வுப் பணியை துவக்கியது தமிழக அரசு.*

### வேதஅறிவுப்போட்டி எண் 135-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. அது இடிந்து விழுமென்று சொல் | - எசே.13:11 |
| 2. சித்தமுள்ளவராயிருக்கிறார் | - 1தீமோ.2:4 |
| 3. நேபுகாத் நேச்சார் | - தானி.1;20 |
| 4. பவுல் | - 2தீமோ.2:1 |
| 5. பாவம்செய்தார்கள் | - ஓசி.4:7 |
| 6. வேதப்புரட்டன் | - தீத்.3:1 |
| 7. அரணான | - யோவே.3:16 |
| 8. பவுல், பிலேமோனை | - பிலே.5 |
| 9. பிரியமில்லை | - ஆமோ.5:21 |
| 10. மிகுந்த ஜனங்கள் | - எபி.11:12 |


### வேதஅறிவுப்போட்டி எண் 135-ல் தேற்சிபெற்றோர்

| | |
|---|---|
| 1. T.தமிழ் செல்வி | - கரூர் |
| 2. ஜான்செல்லையா | -மதுரை |
| 3. திருமதி.மரகதம்திரவியம் | -கோம்பை |
| 4. G.பூங்கோதை | -கோபி |
| 5. T.ராஜாத்தி | -கோம்பை |
| 6. S.கோவிந்தராஜ் | -குமாரபாளை |
| 7. Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி | -திருச்சி |
| 8. T.சூசைமேரி | -தாராபுரம் |
| 9. S.R.பெரியசாமி | -சேலூர் |
| 10. N.கமலவேணி | -சென்னை |
| 11. Mrs.ரூபிபிரகாஷ் | -தாராபுரம் |
| 12. Mrs.பொன்னிவிக்டர் | -தாராபுரம் |
| 13. J.ஜான்பிரபாகர் | -பெரியகுளம் |
| 14. R.ஸ்டெல்லா இளமதி | -தாராபுரம் |

## வேதஅறிவுப்போட்டியாளர்கள் கவனத்திற்கு...

உங்களுடைய விடைகள் ஒவ்வொரு மாதம் 25-ம் தேதிக்குள் வரவேண்டும். இல்லையேல் உங்களுடைய பெயரை சேர்க்க இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

நீங்கள் தொடர்ந்து வேத அறிவுப்போட்டில் கலந்து கொள்வது குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறோம். கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



நன்றி
ஆசிரியர்

மருமக்கள் மூவரும் கீழ்ப்படிந்திருந்தபடியினால் ஜலத்தின் அழிவிற்கு தப்பிக் காக்கப்பட்டார்கள். மேலும் பேழையை விட்டு இறங்கியதும் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் அமைத்து நன்றி செலுத்தினார்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் யோபுவின் மனைவியோ சொத்தாசை பிடித்தவளாக அத்தனையும் இழந்துவிட்டோமே எனக்கருதி யோபுவை பார்த்து: "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்" (யோபு 2:9). நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம் வந்தபோது தன் உடமைகள் எல்லாமே ஜலத்தில் அழிந்துபோயிருக்கும். ஆனால் அவன் மனைவியோ பொருளாசைப்பிடித்தவளாகக் காணப்படவில்லை என்று தான் கருதவேண்டும். அப்படிப் பொருளாசையுடைவளாயிருந்திருப்பாளேயென்றால் நிச்சயம் நோவாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து இருக்கமாட்டாள்.

இன்றைய சகோதரிகள் அநேகர் பொருளாசையுடையவர்களாய் யோபுவின் மனைவியைப் போல தன் கணவனை போடா வாடா என்று கூட பேசி விடுகின்றனர். இப்படிப் பேசுவது நிச்சயமாக ஒரு கிறிஸ்தவ ஸ்திரீக்கு அழகல்ல. ஒரு உண்மையுள்ள, வசனத்தைக் கைக்கொள்ளுகிற கிறிஸ்தவள் நிச்சயமாக தன் புருஷனுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையையும், கனத்தையும் செலுத்தியே ஆக வேண்டும். ஏனென்றால் நாம் நம் புருஷர்மார்களுக்கு ஏற்ற துணையாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம். துணையாக இருப்பவள் அதிகாரியாக மாற முடியாது. எனவே பவுல் ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை..." (1தீமோ.2;11) என்கிறார். ஏனென்றால், "ஆதாம் பிசாசினால் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" (1தீமோ.2;13) எனவே குற்றஞ் செய்த நாம் மனசாட்சியில் குத்தப்பட்டவர்களாக அடங்கி ஒடுங்கி தம் தம் புருஷருக்குக் கிரீடமாயிருக்க வேண்டும்.

சாராள் என்ற ஸ்திரீயைப் பற்றி கிறிஸ்தவ பெண்கள் நன்கு அறிந்திருப்பார்கள். இவள் தன் புருஷன் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள் (1பேது.3:6). பாருங்கள், அவளுடைய நடக்கையைக் கண்ட தேவன் அவளை எவ்வளவாய் கனப்படுத்தியுள்ளார். அவள் விசுவாசிகளின் தாய் எனக் கருதப்படுகிறாள். உலகிலுள்ள அத்தனை விசுவாசிகளுக்கும் அவள் தாய் என்றால் என்னே பெரிய பாக்கியம் பெற்றுள்ளாள்!

அன்பு சகோதரிகளே! கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாகவே, கிறிஸ்துவையுடையவர்களாகவே இருக்கப் பிரயாசப்படுங்கள். நீ, வா என்று



மரணத்தினால் ஜனங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது. சிலுவையின் உபதேசம் மன்னிப்பை கொடுக்கிறது.

**நாம் எதைக்குறித்து மேன்மை பாரட்டவேண்டும்?**

ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக்குறித்து மேன்மைபாராட்டுகிறார்கள். சிலர் வீட்டைக்குறித்தும், சிலர் நாட்டைக்குறித்தும், சிலர் படிப்பைக்குறித்தும், சிலர் தங்களுடைய அழகைக்குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுலே; "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டா திருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" என்கிறார் கலா.6:14-ம் வசனம். அவருடைய மேன்மைபாராட்டல் எப்படிப்பட்டது என்று பார்த்தீர்களா? உங்களுடைய மேன்மைபாராட்டல் எப்படிப்பட்டது. சிலுவைதான் நமக்கு மீட்பைக்கொண்டுவந்தது. நாம் இரட்சிக்கப்பட்டிருப்பது அவருடைய சுத்த கிருபை அதையே மேன்மையாக எண்ணுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**வாசகர் கவனத்திற்கு...**

- 2012-ம் வருட சந்தா செலுத்திவிட்டீர்களா? M.O கூப்பனில் உங்கள் Ref.No----(S) யை மறக்காமல் எழுதவும்.
- உங்கள் நண்பர்களுக்கும் சந்தா செலுத்தி அவர்களும் சத்தியத்தை அறிய உதவிடலாமே!
- உங்களுக்கு வரும் மாத இதழில் கவர் லேபில் முகவரியை கவனியுங்கள். உங்கள் பதிவு எண் Ref.No-----(S) இருந்தால் நீங்கள் சந்தா செலுத்துபவர். இல்லையேல் உடனே செலுத்துங்கள்.
- சந்தா செலுத்தாதவர்களுக்கு வரும் ஆண்டில் இவ்விதழ் நிறுத்தப்படும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.
- இவ்விதழ் தேவைப்படுவோர் உங்களுடைய முழு முகவரியை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பிவைக்கவும்.
- ஆவிக்குரிய புத்தகங்கள் பெறவிரும்புகிறவர்கள் தொலைக்காட்சி அல்லது ரேடியோ நிகழ்ச்சியை கேட்டு அந்நாளில் வந்த செய்தியின் தலைப்பை தெரியப்படுத்தி இவைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.
- நீங்கள் சந்தா செலுத்தியும் உங்கள் பதிவு எண் Ref.No-----(S) வரவில்லையெனில் உங்கள் பதிவு எண்ணை மொபைல் மூலம் தெரியப்படுத்தவும்.

***ஆப்கானிஸ்தான்* - Afghanistan**

- *அலுவலகப் பெயர் - இஸ்லாமிய ஆப்கானிஸ்தான்*
- *அமைப்பு - 1919/1919*
- *தலைநகரம் - காபூல்*
- *மக்கள் தொகை - 29.9மில்லியன்*
- *மொத்தபரப்பளவு - 250,000 Sq மைல்*
- *மொழி - பாஸ்டு, டாஜிக் டாரி, பார்ஸி, உஜ்பெக், டர்க்மென்*
- *சமயம் - சன்னி முஸ்லீம் 84%, சியா முஸ்லீம் 15%, மற்றவை 1%*
- *அரசு - பெயர்ச்சி ஆட்சிமுறை*
- *புதிய ஆப்கன் பணம் - 100 பிளஸ்*




**இங்கே சுவிசேஷம் தொடர்ந்து செல்ல ஜெபியுங்கள்**

# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

### பாடம் -7 மது அருந்துதல் - Drinking

*J.C.Choate*




-தொடர்ச்சி...

அடுத்து என்னோடு கூட கலாத்தியர் 5:19-21க்கு திரும்புங்கள். இங்கே பவுல், "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா.5:19-21). இங்கு தேவனுடைய மனிதனை பட்டியலிடப்பட்டுள்ள பல கிரியைகளையும் பழக்கவழக்கங்களும் ஊக்கமளித்து, அவைகளை அவன் மாம்சத்தின் கிரியைகள் என அழைக்கிறான். மாம்சத்தின் கிரியைகள் யாவை? அவைகள் எல்லாமே கெட்டகாரியங்கள் வேதனையை அளிப்பவைகள், அழிப்பவைகள், மற்றவர்களை வேதனைப்படுத்துபவைகள். எல்லா கெட்ட காரியங்களுக்கும் மத்தியில் குடிப்பழக்கம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதையும் கவனித்தீர்களா. அவை எது? அவை போதை தரும் மது பானங்கள் குடிப்பதினால் வருகின்ற சில காரியங்கள். இப்போது இவற்றினால் இழுக்கப்பட்ட மாம்சத்தின் கிரியைகளைச் செய்ய விருப்பமுடையவர்களா யிருக்கிறீர்களா? நீங்கள் மதுபானங்களை அருந்துவீர்களானால், பின்பு நீங்கள் ஏற்கனவே இதில் சிக்கிக் கொண்டீர்கள்.

தொடர்ந்து நாம் வாசிக்கிறோம், "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" (எபே.5:18). மதுபானம் அருந்துவதைத் தடைசெய்ய விரும்பி அநேக கோட்பாடுகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல், "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" (1தெச.5:22) என எழுதியுள்ளார். அவர் நமது சரீரங்களைப் "...பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக



பெண்கள் பகுதி

# பெண்ணாய் பிறந்தவளே

## O! Ye Who Born As A Woman

*-J.GloryArjunan*



-தொடர்ச்சி

பெண்ணாக பிறந்துள்ள அன்பு சகோதரியே, உன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாயா? "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்" என்று நீதிமொழிகள் 12:4 கூறுகிறது. உலக வழக்கில் ஒரு ஆணின் முன்னேற்றத்திற்குப் பின்னால் ஒரு பெண்ணிருக்கிறாள் என்கின்றனர். நீங்கள் உங்களுடைய புருஷருக்கு ஏற்றதுணையாக இருந்து அவருடைய முன்னேற்றத்திற்கு ஊக்கமளிப்பவராக இருக்கிறீர்களா? அல்லது அது உங்களுடைய வேலை உங்களுடைய வேலைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்கிறீர்களா? நிச்சயமாக ஒரு குணசாரியான ஸ்திரீ புருஷருக்கு புகழ்ச்சியைக் கொண்டுவருவாள். யார் அந்த குணசாலியான ஸ்திரீ? நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் குணசாலியான ஸ்திரீயைப் பற்றி ஒரு பெரிய பட்டியலே கொடுக்கப்பட்டுள்ளது.

குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது அவள் தன் புருஷனையும் தன் வீட்டாரையும் தன் வேலைக்காரர்களையும் நன்கு கவனிக்கிறாள். எனவே அவள் வருங்காலத்தைப் பற்றி கவலை கொள்ளாமல் மகிழ்கிறாள். ஆனால் இன்றைய சகோதரிகள் நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படுகின்றனர். அதிலும் பெண்குழந்தைகள் பிறந்துவிட்டாள் அவ்வளவு தான்! வசனம் கூறுகிறது "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" (சங்.127:4) என்று. இப்படியிருக்க கர்த்தர் உங்கள் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளமாட்டாரா? அவர் வருங்காலத்திற்கும் தேவனாயிருக்கிறார். ஒரு குணசாலியான ஸ்திரீ ஒன்றுக்கும் கவலைப்படாமல் தன் புருஷனுக்கும் தன் வீட்டாரனைவருக்கும் ஏற்ற தன் கடமைகளைச் செய்தால் நிச்சயம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாள். அவளுடைய குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும். ஸ்திரீகள் செய்யவேண்டுவதெல்லாம் சிறுவயதிலேயே தன் பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் கற்றுக் கொடுக்கவேண்டும்.

பாருங்கள்! நோவா காலத்தில் நோவாவின் மனைவி தன் புருஷன் நோவாவிற்குக் கீழ்ப்படிந்திருந்ததுமட்டும்மல்லாது தன் பிள்ளைகள் மூவரும் தன்

பெரிய கவலை ஒன்றையும் கொண்டவளாயிருக்கவில்லை ஆகவே கவலைப்படுவதின் மூலமும் சிறிய காரியங்களைக் குறித்து புகார் செய்து கொள்வதின் மூலமும் எனது சொந்த கஷ்டத்தின் சூழலை உருவாக்குகிறேன். அதன் பின் அது எவ்வளவு சிறிய விஷயம் என வெட்கப்பட்டேன். நான் பெற்றுள்ள எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களை உணர்ந்து பார்க்க உதவும்படி தேவனை நோக்கி ஜெபிக்கிறேன், அதற்குமுன் நான் என்னுடைய மனோநிலையினிமித்தம் இவைகளை இழந்திருக்கக் கூடும்.

நீங்கள் முற்றிலும் எதிர்மறையான மனோபாவத்தையும் ஒரே சூழ்நிலை விளைவின் பயனைப் பிறப்பித்ததையும் இது வாழ்க்கை முறையில் விளக்கப்பட்டுள்ளதை பார்த்தீர்களா? இல்லை, இது உண்மையான சந்தர்ப்பம் அல்ல அல்லது பயங்கரமானது அல்லது நல்ல சமயங்கள் அல்லது அவைகளின் இழப்பு இவைகளெல்லாம் நம்முடைய வாழ்வை வடிவமைக்கிறது இது நமது வழியில் வருகிற ஒவ்வொரு நிகழ்வுக்குமான நேரடியான பதிலில் நம்முடைய சொந்த மனோபாவம் உள்ளது. நாம், நாமே இது ஆசீர்வாதமாக இருக்கும் அல்லது சாபமாக இருக்கும். நாம் வளர்ச்சியடைவோம் அல்லது இதனால் வறண்டு போய்விடுவோம் என தீர்மானிக்கிறோம்.

**மோசே சொன்னார்:** "இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன், இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந் தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாவிட்டால்.... சாபமும் வரும்" (உபா.11:26,27) என்றார்.

கற்பனைகள் எல்லா ஜனங்களுக்கும் ஒரேமாதிரியாக இருந்தது; ஆசீர்வாதம் ஒருவர் வாழ்விலும் சாபம் இன்னொருவர் வாழ்விலும் இருந்த இந்த வித்தியாசம் கற்பனைகளுக்கு அவர்களுடைய பிரதிக்கிரியையாக இருந்தது.

**பவுல் சொன்னார்:** "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற் கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம்" (2கொரி.2:16).

கிறிஸ்தவனும் அவனுடைய செய்தியும் பலவருடங்களாக ஒரே விதமாக நிலைத்திருக்கிறது வேறுபட்ட செய்தியை கேள்விபடுகிறவர்களில் மட்டுமே இருக்கிறது நாம் நாம் ஒவ்வொருவரும், நாம் எப்படி கேள்விப்படுகிறோம், நாம் எப்படி பதிலளிக்கிறோம் என்பனவற்றில் கவனமாயிருக்கவேண்டும். நம்முடைய மனோநிலைகள் பரலோகத்திற்கு அனுப்பப்படும் அல்லது நரகத்திற்கு அனுப்பப்படும். நாம் அவர்கள் மேலும் நம்முடைய பாதுகாப்பில் மிக ஜாக்கிரதையாக இருக்கமுடியாது.

**இலங்கை ஆசியசேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**



ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று" (ரோம.12:1) சொன்னார். 1கொரிந்தியர் 3:16,17 மற்றும் 1கொரிந்தியர் 6:18-20 அவர் நம்முடைய சரீரங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்றும் ஆனபடியினால் நாம் அவைகளை பாவத்தினால் அசுசிப்படுத்தக் கூடாது என்றும் அல்லது சரீரத்தின் ஆலயங்களை அழித்துப் போடவிரும்புகிறவர்களாக அதனுள் எந்த அசுத்தத்தையும் வைத்திருக்கக் கூடாதென்றும் சொல்கிறார்.

எப்போதாவது நீங்கள் மதுபானம் அருந்துகிறவர்களை, அப்பேர்பட்ட மக்களை, மேலும் அவர்கள் மதுஅருந்த எங்கே செல்கிறார்கள் என்பதை கவனித்திருக்கிறீர்களா? மிகவும் கெட்ட மனிதர்களே மதுஅருந்துகின்றனர். கொலைசெய்பவர்கள், பொய்யர், திருடர், ஒழுக்கங்கெட்டவர்கள், இன்னும் இதுபோன்ற பல கெட்ட செயல் செய்பவர்கள். ஆனால் நீங்கள் கண்டிப்பாக நாங்கள் இவ்வகை பிரிவைச் சேர்ந்தவர்களல்ல எனக் கூறவேண்டும். நீங்கள் இப்போது இப்படியில்லையென்றால், நீங்கள் அங்கே இருப்பதற்கு முன் இதை விட்டு விட எவ்வளவு நாட்கள் எடுக்கும்? பாருக்குப்போய், இரவு விடுதிக்குச் சென்று, இன்னும் கெட்ட காரியங்கள் எங்கெல்லாம் நடந்துகொண்டேயிருக்கிறதோ அங்கெல்லாம் சென்று மேலும் அங்கே எப்போதும் திடமான சட்டரீதியாகவோ அல்லது சட்டத்தைமீறியோ கிடைக்கும் இடத்திற்குச் செல்வீர்கள்.

திடமான மதுபானத்தை விளம்பரப்படுத்துபவர்கள் எப்போதும் புத்திக்கூர்மையுள்ளவர் பயன்படும் மதுவகை போலவும், செல்வந்தர்கள், சினிமா மக்கள், பிரபல்யமான விளையாட்டு வீரர்களின் உருவங்களையும் மற்றும் இதுபோன்ற பலவற்றையும் போல படங்களை சித்தரிப்பார்கள் அவர்கள் நீங்கள் முக்கியஸ்தர்கள் என நம்பசெய்யவும் அல்லது அவர்களைப் போல நீங்களும் இருக்க விரும்புவீர்களானால் நீங்களும் மது அருந்துவீர்கள் எனவும் இப்படிச்செய்கிறார்கள். ஆனால் அவர்கள் உங்களுக்கு குடி மயக்கத்தின் சந்தோஷத்திலிருக்கும் எல்லா படங்களையும் காண்பிக்க மாட்டார்கள். அவர்கள் தங்களது வாழ்வை வீணாக்கி தங்களது உடல் நலத்தை தங்கள் குடும்பங்கள் மற்றும் எல்லாவற்றையும் திடமான மதுபழக்கத்தினால் கெடுத்துக்கொள்ளுகிறவர் களாயிருக்கிறார்கள். இல்லை, அவர்கள் எல்லா பட விளம்பரங்களையும் காண்பிப்பதில்லை, ஆனால் கண்டிப்பாக நீங்கள் என்ன நடக்கிறது எப்போது ஒருவன் மது அருந்த துவங்குகிறான் என்பதையும் கண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் புத்திசாலிகளாயிருந்தால், என்னுடைய நண்பரே, நீங்கள் முழுவதுமாக திடமான மது பானத்தை தவிர்த்து விடுவீர்கள். முதலாவது மதுபானத்தை குடிக்காதீர்கள். உங்கள் வீட்டிற்குள் நுழைய அனுமதிக்காதீர்கள். உங்கள் குடும்பத்தின் முன் ஒரு கெட்ட மாதிரியாக இருக்காதீர்கள். உங்களை மதுபானம் அழித்துவிட அனுமதிக்காதீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களை மது அருந்தும்படி தூண்டுவதற்கு அனுமதிக்காதீர்கள். அவர்கள் மதுஅருந்தினால்

அவர்கள் நீங்களும் மதுஅருந்தும்படி விரும்புவார்கள் ஆகவே நீங்கள் அவர்களிடம் குற்றம் கண்டுபிடிக்க இயலாது.

ஒரு குடிப்பழக்கமுடையவன் இவ்வுலகிலும் மற்றும் வரவிருக்கும் உலகிலும் காப்பாற்றப்பட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிச்சயமாக மது அருந்துகிற ஒருவன் தன்னுடைய மது அருந்தும் பழக்கத்திற்காக மனந்திரும்ப அல்லது அதை விட்டு விலகி, கிறிஸ்துவுக்குள் தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, தன்னுடைய பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு வர இயலும் அதன் பிறகு கர்த்தர் அவனை இரட்சித்துக் கொள்வார். ஆனால் இது திடமான மது அருந்துவது போன்ற கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து விலகி தேவனுக்கு கீழ்ப்படியும் போதுதான் அவன் இரட்சிக்கப்பட முடியும். நீங்கள் கேள்விப்பட்டிருக்கிற சத்தியத்தையும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மது அருந்தவே மாட்டார்கள் என்பதையும் குறித்து கவலையற்றவர் களாயிருந்தாலும் கூட நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் குடிப்பழக்கமுள்ளவர் என்று அழைக்கப்பட விரும்ப மாட்டீர்கள். ஆனபடியினால், மது அருந்தாதீர்கள், அல்லது நீங்கள் மது அருந்தினால், அந்த அசுத்தமான, ஊதாரித்தனமான, அழிவுள்ள பழக்கத்திலிருந்து வெளி வர தீர்மானியுங்கள். மது அருந்தும் பழக்கம் நற்பழக்கமல்ல, ஆனால் மது அருந்தாமலிருப்பது நற்பழக்கமாகும்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறிவிடுவீர்கள் என நான் நம்புகிறேன். மேலும் கிறிஸ்து இந்த கெட்ட பழக்கத்தை மேற்கொள்ளவும் அல்லது இதிலிருந்து விலகியிருக்கவும் உதவிசெய்வாராக!

இக்காரியங்களில் நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய முடியுமானால், அதிகமாக புத்தகங்கள் அல்லது உங்களுடைய கேள்விகளுக்கு பதில்களை அனுப்பிவைக்கிறோம். தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள்.

இதே நேரத்தில் அடுத்த முறை உங்களை மீண்டும் சந்திப்பேன். கர்த்தர் இப்போது உங்களை ஆசீர்வதிப்பாராக!

## ஜெபியுங்கள்

1. புதிய வேலைகளுக்காக...
2. புதிய தீர்மானங்களுக்காக...
3. இவ்வருட ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
4. புதிய வருடத்தை கர்த்தர் நமக்கு ஆசீர்வதித்துக்கொடுக்கும்படியாக...
5. புதிய ஆத்துமாக்களுக்காக...





பெண்கள் பகுதி

# மனோநிலைகள்
# Attitudes

*-Betty*



-தொடர்ச்சி

வியாதியுடன் இருப்பதாக கூறின கிறிஸ்தவர்களைச் சந்திக்க தானாக முன்வருபவர்கள் அழைக்கப்பட்டனர்.

**டாம்:** வேண்டாம், என்னை அழைக்காதீர்கள் எனக்கு என்ன சொல்லுவதென்று தெரியாது. மேலும், நோய் என்னை சோர்வடையப்பண்ணுகிறது"

**ஸ்காட்:** நான் போகிறேன். ஒருவேளை என்னால் சில உதவி செய்யமுடியும். வியாதியஸ்தர்களைப் பார்ப்பதினால் என்னுடைய உடல் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது என்று நான் எவ்வளவு நன்றியுள்ளவனாயிருப்பது எத்தனை அவசியம் என என்னை அதிகமாக நினைவு படுத்துகிறது மேலும் படுக்கையில் படுத்துக் கொண்டு, வேதனையை அநுபவித்துக் கொண்டு, யாராவது வந்து போதுமான அளவு பராமரிப்பார்களென்றால் அது ஆச்சிரியமாயிருக்கும் என்பவர்களை பார்க்கவேண்டியது என்னுடைய வேலையாயிருக்கிறது"

**வாழ்வினாலும் சாவால்களினாலும் களைப்பு**

**பெத் கேள்விப்பட்டதை குறிப்பிடுகிறாள்:** "நான் ஒவ்வொன்றினாலும் மிகவும் சோர்ந்து போய் கொண்டிருக்கிறேன். கால அட்டவணையை வைத்துக்கொண்டிருக்க வேண்டியது, சவால்கள், செலுத்தவேண்டிய ரசீதுகள். நான் பிடித்துக் கொள்வது ஒருபோதும் முடியாதது, கூடுதல் நேரத்தை ஒருபோதும் பெற்றிருக்காதது அல்லது பணம்; ஒவ்வொன்றும் சரியான போராட்டம் போல் காண்கிறேன்".

**அனிதா புன்முறுவல்செய்தாள்:** சில நேரங்களில் நான் நினைக்கிறேன், நான் மிகவும் சோர்வாக இருப்பதைப் போலவும், இதைவிட்டு நான் உடனே வெளிவர முடியுமென நான் விரும்புகிறேன்", ஆனால் பின்பு என் குடும்பத்தில் மிக மோசமான நிலையில் வியாதியுள்ள சிலரை கவனிக்கவேண்டும், அல்லது எனது கணவர் வெளியூர் சென்றுள்ளார், அல்லது மகனை அல்லது மகளை பயங்கரமான நிலையில் என் குடும்பங்களில் இழந்திருக்கிறேன் அல்லது எங்கள் குடும்பங்கள் தேவனை விட்டு விலகிப் போயிருக்கிற குழந்தைகள் அல்லது இப்படிப்பட்ட உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்கின்றனர் அதன்பின் நான் இவ்வூழியத்தை எவ்வளவு சந்தோஷமாக செய்யவேண்டியவளாய் இருக்க வேண்டும் என நான் அறிகிறேன், எனக்கு எந்த ஒரு உண்மையான பிரச்சனை அல்லது வாழ்வதற்கான